# இயேசுவின் தொனி

## தீர்க்கதரிசன மாத இதழ்

மலர்:1 ஆகஸ்ட்-2025 இதழ்:1



# இனிவரும் மரண அலை

# ஆசிரியர் பக்கம்



இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் நல்வாழ்த்துக்கள். தேவனின் கிருபையால் கடந்த 7 மாதங்களையும் கடந்து வந்திருக்கிறோம்.

உலகம் தனது கடைசி சுற்றில் இயங்கிக் கொண்டிருக்கிறது. தேசங்களில் எங்கு பார்த்தாலும் இருள் வேகமாக சூழ்ந்து கொண்டே வருகிறதைப் பார்க்கிறோம். தேவன் கடைசிக்கால தலைமுறைகளைக் கொண்டு இருளை ஜெயிக்கவும், இருளின் கிரியைகளை அழிக்கவும் சித்தம் வைத்திருக்கிறார்.

இது நாம் கிரியை செய்யவேண்டிய காலம். சாத்தான் தீவிரமாய் தன் கிரியைகளை நடப்பித்துக் கொண்டிருக்கும் போது, தேவ ஜனங்களான நாம் எழும்பி செயல்பட வேண்டியது அவசியம்.

கறைபடிந்திருக்கும் இந்த பூமி சுத்திகரிக்கப்படவும், ராஜாதி ராஜாவாக இயேசு கிறிஸ்து உலகை ஆளுகை செய்யும்படி வருவதற்காக பாதைகளைச் செவ்வை பண்ணவும், தேவன் வாக்குப்பண்ணியிருக்கும் கடைசிக்கால அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டு கடைசிக்கால சேனைகளாக எழும்பவும் வேண்டும் என்கிற நோக்கத்துடன் இக்கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. தேவனின் திட்டத்தின்படி மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமைகளில் தீர்க்கதரிசன உபவாச ஜெபமானது இராமநாதபுரத்தில் அமைந்திருக்கும் நமது இயேசுவின் தொனி தீர்க்கதரிசன மையத்தில் நடைபெற்று வருகிறது.

அதன் செய்தியும், அறிக்கையும், கலந்துகொண்ட ஜனங்கள் பெற்றுக் கொண்ட அனுபவங்களில் சிலவற்றை தேர்வு செய்து உங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணவும், தேவ நாமம் மகிமைக்கென்றும் வெளியிட்டிருக்கிறோம். உங்கள் ஜெப தேவைகளுக்காக அல்லது வேறு தகவல்களைப் பெற விரும்பினால் எங்கள் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளுங்கள். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதித்து நடத்துவாராக, ஆமென்!

கிறிஸ்துவின் பணியில்,

**சகோ. வின்சென்ட் செல்வகுமார்**

**VOICE OF JESUS MINISTRIES**
**P.O.BOX : 23, RAMANATHAPURAM**
**623501, TAMILNADU, S. INDIA**
**CONTACT : (+91) 9788 404 333**

# இனிவரும்
# மரண அலை

*கடைசிக்காலத்தில் ஒரு மாபெரும் மரண அலை தோன்றப் போவதாக வேதம் முன்னறிவித்திருக்கிறது. இந்த மரண அலை ஒவ்வொன்றிலும் பூமியின் ஒட்டுமொத்தக் குடிகளும் பாதிப்படையப் போகிறார்கள் என்பதுதான் பயங்கரத்தின் உச்சம்.*



**தீர்க்கதரிசன செய்தி**

**சகோ. வின்சென்ட் செல்வகுமார்**

நீங்கள் சமுதாயத்தின் நிகழ்வுகளைக் கூர்ந்து கவனிக்கிறவர்களாயிருக்கும் பட்சத்தில் நிச்சயமாகவே ஒரு விஷயத்தை கவனித்திருப்பீர்கள். அது, தற்காலத்தில் மனித சமுதாயத்தில் கூட்டம் கூட்டமாக ஏற்பட ஆரம்பித்திருக்கும் மரணங்கள்.

சமீபகாலமாக எல்லாத் தினசரிகளிலும் இரத்தவாசனை விரவியிருக்கிறது. ஒவ்வொரு செய்தித்தாள்களிலும் கூட்டம் கூட்டமாய் மரிக்கும் 'மாஸ் டெத்' செய்திகளே அதிகமாக இடம் பெறுகின்றன.

சாலை விபத்து தொடங்கி விமான விபத்துகள் வரைக்கும், விபத்துகள் ஒரு பக்கம் கூட்டம் கூட்டமாக மனித உயிர்களை வேட்டையாடுகிறது என்றால், இன்னொரு பக்கம் தீவிரவாதிகள் மற்றும் போராளிகளின் கண்ணி வெடிகளும், மனித வெடிகுண்டுகளும் மனிதர்களை வேட்டையாடுகின்றன. போதாக் குறைக்கு பல்வேறு விதமான கொள்ளை நோய்கள் கூட்டம் கூட்டமாக மனிதர்களை பலி வாங்குகின்றன. இதைத்தவிர, இயற்கையின் சீற்றங்கள் ஒரு பக்கம்.

விபத்து, கொள்ளைநோய், தீவிரவாதம், இயற்கைச் சீற்றம் என்று காரணங்கள்தான் வெவ்வேறே யொழிய, விளைவு மாத்திரம் என்னவோ ஒன்று தான் - மாஸ் டெத்!

நாளுக்கு நாள் எகிறிக் கொண்டு வரும் மரண விகிதத்தை நன்கு உற்றுப் பார்த்தால் முன்னெப்போதையும் விட, இந்தக் காலங்களில் மரணத்திற்கு வேகமும், ஆவேசமும் கூடியிருப்பது மாதிரித் தெரிகிறது. உண்மைதான். சமீப காலமாக மரணத்திற்கு வேகம் கூடித்தான் இருக்கிறது. சிறுவர், பெரியவர், குழந்தைகள் என்றெல்லாம் எந்தப் பாகுபாடும் பார்க்காமல் எல்லாத் திறத்தாரையும் தீண்டிப் பார்க்க ஆரம்பித்திருக்கிறது. ஆனால் ஒன்று தெரியுமா?

மரண ஓட்டத்திற்கு இது துவக்கம்தான். ரன்-வேயில் பிளேன் ஓடத் துவங்குவது மாதிரி.

இனி டேக்-ஆப் ஆகும் போதுதான் இதன் கொடூரம் முழுமையாகத் தெரியும். பூச்சக்கரம் முழுவதையும் இந்த மரண அலை ஆட்டிப்படைக்கப் போகிறது - கொடூரமாக! கூட்டம் கூட்டமாக!!

மரணம் மனிதகுலத்திற்கு புதிதல்ல. நாம் பிறக்கும் முன்பாகவே மரணம் இருக்கிறது. மரணம் சமத்துவமாய் எந்த வித வித்தியாசமுமில்லாமல் எல்லோரையும் எப்படியோ, எங்கேயோ, ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் சந்தித்துவிடுகிறது.

மரணம் மனுக்குலத்திற்கு புதிய நிகழ்வு இல்லை. ஆனால், வேதம் சொல்லும் இந்த மரண அறுவடை கொஞ்சம் வித்தியாசமானது. கடைசிக்காலத்தில் ஒரு மாபெரும் மரண அலை தோன்றப் போவதை வேதம் முன்னறிவித்துள்ளது. இந்த மரண அலை இயற்கையாக உண்டாகும் மரணமல்ல. எல்லாமே அகால மரணங்கள். சடுதிச் சாவுகள்!

கடைசிக்காலத்தில் இந்த மரண அலை தோன்றும் என்று வேதம் முன்னறிவிக்கிறது. இந்த மரண அலைகள் ஒவ்வொன்றிலும் பூமியின் ஒட்டுமொத்தக் குடிகளும் பாதிப்படையப் போகிறார்கள் என்பதுதான் பயங்கரத்தின் உச்சம். கடைசிக்காலத்தில் தோன்றப் போகும் மரணஅலையின் முதல் அலையைப்பற்றி வேதம் சொல்வதைக் கவனியுங்கள்.

நான் பார்த்தபோது, இதோ,மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன். அதின் மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்: பாதாளம் அவன் பின்சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்ட மிருகங்களினாலும் பூமியில் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலை செய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது. (வெளி 6:8)

கவனியுங்கள். இங்கே யோவான் கண்ட தரிசனத்தில் மரணம் ஒரு குதிரையில் ஏறிப் புறப்படுவதாகக் காட்டப்பட்டிருக்கிறது. தரிசனங்கள் பெரும்பாலும் உவமைக் கருத்துக்களைக் கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியும். அதன்படி குதிரை என்பது வேகத்தையும், பலத்தையும் குறிக்கும்.

கடைசிக்காலத்தில் தோன்றப்போகும் இந்த மரண அலை மிகவும் வேகமாக தேசங்களுக்குள்ளே பரவிச் செல்கிறதாக இருக்கும். இதன் பலமும், பராக்கிரமமும் யாரும் எதிர்கொள்ள இயலாததாகவும் இருக்கும். இந்த மரணம் மனிதர்களை அழிப்பதற்கு பல்வேறு காரணங்களைக் கையில் எடுத்துக் கொண்டாலும், அதன் நோக்கம் ஒன்றேயொன்றுதான், தனக்கு நியமிக்கப்பட்ட எண்ணிக்கை மரணத்தை பூமியில் அரங்கேற்றிவிட வேண்டும்.

**அதன் இலக்கு என்னவென்கிறீர்கள்? - பூமியின் குடிகளில் காற்பங்கு.!**

அதாவது, பூமியில் குடியிருப்பவர்களில் நாலில் ஒரு ஆள் இந்த பயங்கர மரணத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறான்.

இந்தியாவில் மக்கள் தொகை தற்சமயம் 146 கோடி என்கிறார்கள். அதைக் கொண்டு பார்த்தால் இந்தியாவில் மாத்திரம் சுமார் 36.5 கோடிப்பேர் இந்த மரண அலையினால் பாதிக்கப்பட வேண்டும். அப்படியானால் எத்தனை பயங்கரங்கள் இங்கே அரங்கேற வேண்டும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.

வீதிகளில், வீடுகளில், பள்ளிகளில், பயணங்களில் என்று எல்லா இடங்களிலும் மரண ஓலம் கேட்டுக் கொண்டேயிருக்கும். இந்தியாவில் இன்றைக்கு பத்து கோடிப்பேர் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கணக்குச் சொல்கிறார்கள்.

ஒரு கேள்வி கேட்கிறேன். உங்களுக்கு தெரிந்தவர்களில் எத்தனை பேர் சர்க்கரை நோயாளிகள் இருக்கிறார்கள் என்று யோசித்துப்பாருங்கள். நிச்சயமாக உங்களுக்குத் தெரிந்தவர்களில் அல்லது உறவினர்களில் ஒரு நாலுபேராவது சர்க்கரை நோயாளிகள் இருப்பார்கள். உண்மைதானே?

146 கோடியில் வெறும் பத்து கோடிப்பேரைப் பீடித்திருக்கும் ஒரு வியாதியினால் பாதிக்கப்பட்டவர்களில் பலர் உங்களுக்குப் பரிச்சயமானவர்களாயிருக்க, 36.5 கோடிப்பேரை பாதிக்கப்போகும் மரணத்தால் மரிக்கப் போகிறவர்களில் எத்தனைபேர் உங்களுக்குத் தெரிந்தவர்களாயிருக்க வாய்ப்பிருக்கிறது என்றும் யோசியுங்கள். பயங்கரமாயிருக்கிறது இல்லையா?

இதுதான் பூமியில் அடுத்து நிறைவேறப்போகும் பயங்கரம். இந்த பயங்கரம் ஒரு நாட்டில் மாத்திரம் அரங்கேறப்போகிற விஷயமில்லை. உலகமெங்கும் குறிப்பிட்ட கால கட்டத்துக்குள் நிறைவேற்றப்படவிருக்கும் பயங்கரம்.

இனிவரும் காலங்களில் உலக அளவில் விபத்துகள் பெருகலாம். உலக அளவில் இயற்கைச் சீற்றங்கள், உலக அளவில் தீவிரவாதங்கள், உலக அளவில் கொள்ளை நோய்கள் பெருகலாம். உலக அளவிலான யுத்தங்கள் ஏற்படலாம். எல்லாவற்றிற்கும் வாய்ப்பிருக்கிறது. காரணம், உலக ஜனத்தொகையில் நாலில் ஒரு பங்கு ஜனங்கள் இப்படிப்பட்ட துர்மரணத்தினால் பாதிக்கப்பட வேண்டியிருக்கிறது.

வெளிப்படுத்தின விசேஷம் 6ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும் இந்த மரணதூதனின் உலகளாவிய பயணத்தின் முடிவில் உலக ஜனத்தொகையில் கால் பங்கு அழிந்து மீதி மூன்று பங்கு ஜனங்கள் மாத்திரமே இருப்பார்கள். சரி. இத்தோடு விட்டதா மரணம் என்று பார்த்தால் அப்படியும் தெரியவில்லை. இன்னும் ஒரு உலகளாவிய மரணம் உண்டாகும் என்பது பற்றி வெளிப்படுத்தின விசேஷம் 9வது அதிகாரத்தில் மறுபடியும் சொல்லப்பட்டுள்ளது. வாசித்துப் பாருங்கள். வெளி 9:14-15

எக்காளத்தைப் பிடித்திருந்த ஆறாம் தூதனை நோக்கி: ஐபிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே கட்

டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களையும் அவிழ்த்துவிடு என்று சொல்லக் கேட்டேன். அப்பொழுது மனுஷரில் மூன்றில் ஒரு பங்கைக் கொல்லும்படிக்கு ஒரு மணி நேரத்திற்கும், ஒரு நாளைக்கும், ஒரு மாத்திற்கும், ஒரு வருடத்திற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருந்த அந்த நான்கு தூதர்களும் அவிழ்த்துவிடப் பட்டார்கள்.

இந்த முறை தோன்றப்போகும் மரண அலை கொஞ்சம் வித்தியாசமானது. இது ஒரு நாட்டிலிருந்து எழும்பி உலகம் முழுவதிலும் இருக்கிற மனிதர்களைக் கொல்லப்போகும் அலை.

மங்கின நிறமுள்ள குதிரையில் ஏறியிருந்த மரணத் தூதனைத் தவிர, இன்னும் நான்கு மரண தூதர்கள் இந்த பயங்கரத்தை அரங்கேற்றும்படி, ஆயத்தமாகக் கட்டப்பட்ட நிலையில் கட்டளைக்காகக் காத்திருக்கிறார்கள். இவர்கள் கட்டவிழ்க்கப்பட்டால் மனிதர்களில் மூன்றில் ஒரு பங்குப் பேரைக் கொன்று விட்டுத்தான் ஓய்வார்கள்.

இந்த முறை தோன்றப்போகும் மரண அலையில் இந்த தூதர்கள் மரணத்திற்காக எடுத்துக்கொள்ளும் காரியங்கள் மூன்று : அக்கினி, புகை, கந்தகம். (வெளி 9:18)

இதை இக்காலத்திற்கு ஏற்றபடி சொன்னால், அக்கினி என்பது நியூக்ளியர் ஆயுதங்களையும், புகை என்பது பயாலஜிக்கல் ஆயுதங்களையும், கந்தகம் என்பது கெமிக்கல் ஆயுதங்களையும் குறிப்பதாயிருக்கலாம். இந்த வசனங்களை மேலும் வாசித்துப் பார்த்தால் நமக்கு இன்னும் சில காரியங்கள் புலனாகின்றன.

முதலாவது, இந்த நான்கு தூதர்களும் ஒரே கால அளவில் கிரியை செய்யவில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு கால கட்டத்தில் கிரியை செய்கிறார்கள். முதலாவது தூதன் ஒரு மணிநேரம் கிரியை செய்கிறான். இரண்டாவது தூதன் ஒரு நாள் அல்லது 24 மணி நேரம் கிரியை செய்கிறான். மூன்றாவது தூதன் ஒரு மாதக் காலம் கிரியை செய்கிறான். நான்காவது தூதன் ஒரு வருடம் கிரியை செய்கிறான். இவர்கள் செய்த கிரியைகளின் மொத்தப் பலன் உலக ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினரின் அழிவு.

அழிவைக் கொண்டு வரப்போகும் இந்தத் தூதர்கள் எங்கே வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் வேதம் தெளிவாகக் காட்டுகிறது. இவர்கள் நாலு பேருமே ஐபிராத் நதியண்டையிலே கட்டப்பட்டிருக்கிறார்கள். வேதம் குறிப்பிடும் ஐபிராத் என்னும் நதியை ஆங்கிலத்தில் யூப்ரடீஸ் என்று குறிப்பிடுகிறார்கள். மெசப்படோமியாவில் பாயும் யூப்ரடீஸ் மற்றும் டைகிரிஸ் நதிகள் பற்றிப் பள்ளியில் படித்திருப்பீர்கள். ஐபிராத் என்னும் இந்த யூப்ரடீஸ் நதி பாயும் இடத்தில்தான் ஈராக் தேசம் அமைந்திருக்கிறது.

இன்றைக்கு இருக்கும் இந்த ஈராக் தேசத்தில்தான் இனி வரப்போகும் மனிதகுல பயங்கரம் ஒளிந்திருக்கிறது. இங்கிருந்து புறப்படும் நான்கு பிரச்சனைகள், அல்லது நான்கு ஆளுநர்கள் மூலம் ஏராளமான ஜனங்கள் மரிக்க வேண்டியிருக்கிறது. இவை நாலுவிதமான கால அளவில் இயங்குவதாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. நான்கு பிரச்சனைகளின் வேகத்திலும் வித்தியாசம் இருப்பது தெரிகிறது.

முதல் பிரச்சனை அல்லது நபர் ஒரு மணிநேர அளவு மாத்திரமே கிரியை செய்வார். இதனால் ஒரு கூட்டம் மனித உயிர்கள் பலி வாங்கப்படும். இதிலும் ஒரு மணிநேரம் என்பது எழுத்தின்படியே ஒரு மணிநேரமாக இருக்காது என்று கருதுகிறேன். தற்சமயத்துக்கு இதை ஒரு குறைந்த கால அளவு என்று பொருள் கொள்ளலாம்.

இரண்டாவது பிரச்சனை அல்லது நபரின் கிரியை ஒரு நாள் அளவும் நடைபெறும். அதாவது முதல் பிரச்சனையைவிட 24 மடங்கு வேகம் அதிகம். இதனாலும் ஒரு பெரிய கூட்டம் ஜனங்கள் பலியாவார்கள். மூன்றாவது நபரின் கிரியை ஒரு மாதம் நடைபெறும், அதாவது இரண்டாவது நபரைப்போல முப்பது மடங்கு வேகம். இதனால் முதல் இரண்டில் கொல்லப்பட்டவர்களைவிட, அதிக அளவிலான ஜனங்கள் பலியாவார்கள்.

நான்காவதாக வரப்போகும் பிரச்சனையின் கிரியைகள் ஒரு வருட காலம் நீடிக்கும். அதாவது மூன்றாவது வந்ததைப் போல பன்னிரண்டு மடங்கு. அல்லது இரண்டாவதைப் போல 365 மடங்கு. இதனால் திரளான ஜனங்கள் கொல்லப்படுவார்கள். இந்த நான்கு பிரச்சனைகளின் செயல்பாடுகளினால் அழிந்தவர்களின் மொத்தக் கூட்டுத்தொகையைக் கணக்குப் பார்த்தால் அது மொத்த உலக ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்காக இருக்கும்.

வேதத்தில் உலகம் தழுவிய பாதிப்புகளை உண்டாக்கப் போகும் பயங்கரம் ஈராக்கிலிருந்து கட்டவிழ்த்து விடப்படும் என்று சொல்லப்பட்டிருப்பதால், ஈராக்கில் ஏற்படும் ஒவ்வொரு சிறு சலசலப்பையும் நாம் கவனிக்க வேண்டும். ஏனெனில் ஈராக்கில் இனிமேல் தோன்றப் போகும் ஏதோ நான்கு பிரச்சனைகள் அந்த நாட்டை மாத்திரம் பாதிக்கிறதாயில்லாமல், உலக நாடுகள்

எல்லாவற்றையுமே பாதிக்கிற பிரச்சனையாக அமையப்போகிறது.



இதில் நாம் கவனிக்க வேண்டிய விஷயம். மத்தியக் கிழக்கு நாடுகளில் தான் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மனிதர்கள் வேலைக்காகச் சென்று அங்கு குடியிருந்து வருகிறார்கள். அதிலும் திரளான இந்தியர்கள்தான் அங்கே எல்லா தரப்பு வேலைகளிலும் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். ஒருவேளை உங்கள் உறவினர்களில் கூட யாராவது இந்த தேசங்களில் பணிசெய்து கொண்டிருக்கலாம். இப்படி பல்வேறு தேசத்தவர் குழுமியிருக்கும் ஒரு நாட்டில் இப்படிப்பட்ட ஆட்கொல்லி அபாயம் ஒளித்து வைக்கப்பட்டிருப்பது எத்தனை பெரிய ஆபத்து? இங்கே இந்த ஆட்கொல்லி அபாயம் கட்டவிழ்த்து விடப்பட்டால் உலக ஜனங்களில் பெரும்பாலான இனங்கள் இங்கே நடக்கும் அபாயத்தில் மாட்டிக் கொண்டு உயிரிழக்கும் அபாயமும் இருக்கிறது.

ஈராக்கில் இந்த ஆட்கொல்லி அபாயம் கட்டவிழ்த்து விடப்படும் காலத்தில், மத்தியக் கிழக்கு நாடுகள் முழுவதுமே பெரும்பாதிப்புக்குள்ளாகும் அபாயம் இருக்கிறது. மாத்திரமல்ல, அது பரவி உலக நாடுகளிலும் வெடிக்கும் அபாயங்கள் இருக்கிறது.

எது எப்படியோ, இப்போது மீந்திருந்த மூன்று பங்கு ஆட்களிலும் ஒரு பங்கினர் இவ்விதக் கொடு மரணத்தால் பாதிக்கப்படுவார்கள். இந்தியாவை வைத்து மாத்திரம் நாம் ஒரு சிறு கணக்குப் போட்டால், முதல் அலையில் மாண்டவர்கள் எண்ணிக்கை 36.5 கோடி. இது போக மீதியிருந்த ஜனத்தொகை 109.5 கோடிப்பேர். இவர்களில் மூன்றில் ஒரு பங்கு பாதிக்கப்பட்டால் பாதிக்கப்படுகிறவர்களின் தொகை மறுபடியும் 36.5 கோடிப்பேர். அப்படியானால் மீதியாயிருக்கப்போவது எத்தனை பேர்? (இந்தியாவின் ஜனத்தொகை 146 கோடியாயிருக்கும் பட்சத்தில் செய்யப்பட்ட உத்தேசக் கணக்கு)

ரொம்பவும் சுலபம். 73 கோடிப் பேர். அதாவது பாதிக்குப் பாதிப்பேர்.

இந்தியாவில் மாத்திரமல்ல, ஒட்டுமொத்த உலக நாடுகளிலுமே இதே தான் நிலை. நாம் ஒரு சாம்பிளுக்காகத்தான் இந்தியாவை எடுத்துக்கொண்டோம்.

காரியத்தின் கடைத்தொகை. உலக ஜனத்தொகையில் பாதிக்குப் பாதி கடைசிக்கால பயங்கர மரணத்தால் பாதிக்கப்பட வேண்டியிருக்கிறது. அதாவது இருவரில் ஒருவர் பாதிப்புக்குள்ளாவார். ஒருவர் மீதியாக விடப்படுவார். மரண அலையின் பயங்கரம் வேதத்தில் ஆணித்தரமாய் முன்னுரைக்கப்பட்டாலும் அதையெல்லாம் யார் கவனிக்கிறார்கள்?

இந்த வகை மரணத்தில் நாம் கவனிக்க வேண்டிய இன்னொரு அம்சமும் இருக்கிறது. இந்த வகை மரணத்தால் பாதிக்கப்பட்டு மரிக்கிற ஒருவரும் பரலோகவாசியாக இருக்க முடியாது.

காரணம், வேதத்தில் வெளி 6:8ல் சொல்லப்பட்டிருப்பதை வாசித்துப் பார்த்தால் விளங்கும். மங்கின நிறமுள்ள குதிரையில் ஏறியிருந்த மரணம் தேசங்களுக்குள் கட்டவிழ்த்து விடப்பட்டபோது, பாதாளமும் அதன் பின்னால் வாயைத் திறந்துகொண்டே சென்றதாம்.

எதற்கு? இந்தவகை மரணத்தில் மரிக்கிறவர்களை விழுங்குவதற்காக.

அப்படியானால் இந்த விதமான கோபாக்கினை மரணத்தால் பாதிக்கப்படுகிற யாரும் பரலோகத்திற்குள் நுழைய முடியாது என்பது அர்த்தமாகிறதல்லவா? இதையே நீங்கள் வேறொரு கோணத்திலும் அர்த்தம் செய்து பார்க்கலாம். அதாவது, பரலோகத்திற்குரியவர்களை இந்த வகை மரணம் நெருங்கவே நெருங்காது.

அதற்காக மீதியாக விடப்பட்ட எல்லாருமே பரலோகவாசிகள் என்றும் நீங்கள் அர்த்தம் செய்துகொள்ளக் கூடாது. மீதியாக விடப்பட்டவர்களில் பரலோகத்திற்குரியவர்கள், அல்லாதவர்கள் இரண்டுபேருமே தான் கலந்திருப்பார்கள். ஆனால் பரலோகத்திற்குரியவர்கள் என்று தம் இரத்தத்தைக் கொண்டு கர்த்தரால் முத்திரையிடப்பட்டவர்களில் ஒருவரும் இவ்விதமான மரணத்தால் பாதிக்கப்படமாட்டார்கள் என்பது மாத்திரம் சர்வநிச்சயம்.

இந்த இரண்டு அலைகள் தவிர, மூன்றாவதாக இன்னொரு காரியத்தையும் வேதம் சொல்கிறது.

மூன்றாம் தூதன் எக்காளம் ஊதினான். அப்பொழுது ஒரு பெரிய நட்சத்திரம் தீவட்டியைப்போல எரிந்து, வானத்

திலிருந்து விழுந்தது. அது ஆறுகளில் மூன்றில் ஒரு பங்கின் மேலும், நீரூற்றுகளின் மேலும் விழுந்தது. அந்த நட்சத்திரத்துக்கு எட்டி என்று பெயர். அதினால் தண்ணீரில் மூன்றில் ஒரு பங்கு எட்டியைப்போல கசப்பாயிற்று. இப்படிக் கசப்பான தண்ணீரினால் மனுஷரில் அநேகர் செத்தார்கள். (வெளி 8:10-11)

பாருங்கள். மழை விட்டும் தூவானம் விடாத கதையாக, பூமியில் பாதிக்குப் பாதிப்பேர் செத்தது போதாதென்று இப்போது அநேகம் ஜனங்களைக் கொல்லும்படியான மற்றொரு மரணம் தண்ணீரின் மூலமாக வெளிப்படப்போவது எத்தனை பயங்கரமான காரியம்?

இந்த முறை மரணத்தின் காரணம் வானத்திலிருந்து விழுந்த ஒரு நட்சத்திரமாயிருக்கப் போகிறது.

வானத்திலிருந்து விழும் எரிகற்களும், சிறு கோள்களும் பூமியில் பல்வேறு விதமான இரசாயன மாற்றங்களை ஏற்படுத்தி விடுவது இயல்புதான். இங்கே நாம் பார்க்கும் விழப்போகும் நட்சத்திரம் உண்டாக்கப் போகும் இரசாயன மாற்றம் தண்ணீரில் உண்டாகப்போகிறது. இதனால் தண்ணீரெல்லாம் விஷமாகி மனிதரில் அநேகம் பேர் மரிக்கப் போகிறார்கள்.

வேதம் இத்தனை பேர் என்று கணக்குச் சொல்லாவிட்டாலும் அநேகம் பேர் என்று சொல்லியிருப்பதிலிருந்து நிச்சயமாக அது ஒரு பெரிய அளவு எண்ணிக்கையாகத்தான் இருக்கும் என்று நிதானிக்கலாம்.

இப்படி ஒன்றன்பின் ஒன்றாய் அலையலையாய் வரப்போகும் மரண அலைகள் மனித சமுதாயத்தில் உண்டாக்கப்போகும் பயங்கரம் சொல்லிமுடியாத அளவில் இருக்கப்போவது உறுதி. தேசங்கள் ஒன்றுக் கொன்று உதவி செய்துகொள்ள முடியாதபடிக்கு எல்லா தேசங்களிலுமே மரண ஓலம் கேட்கப் போகிறது.

மனித சமுதாயத்தில் மாற்றி மாற்றி வீசப்போகும் இந்த மரண அலைகளுக்குப் பிறகும் எத்தனை பேர் மீதியாய் விடப்படுவார்கள் என்பது நமக்குத் தெரியவில்லையாயினும் மனிதகுலத்தைச் சூறையாடப் போகும் இந்த மரண அலையில் நாம் சிக்கி விடக்கூடாது என்பது மாத்திரம் தெரிந்திருந்தால் போதுமானது!

மரண அலையில் சிக்காதபடிக்கு தப்ப வழியிருக்கிறதா என்பீர்கள். நிச்சயம் வழியிருக்கிறது. மரண அலை மாத்திரமல்ல, எல்லாப் பயங்கரங்களிலிருந்துமே தப்பிப்பதற்கு வழியிருக்கிறது.

இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனும் என்றார்.

இயேசுவை அண்டிக்கொள்வது ஒன்று மாத்திரம்தான் வழி. தப்பிப்பதற்கு மாத்திரமல்ல, தப்பினவர்கள் நித்திய வாழ்வை அடைவதற்கும் அவர் மாத்திரம்தான் வழி.

குமாரன் கோபங்கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு அவரை முத்தஞ்செய்யுங்கள்; கொஞ்சக் காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும். அவரை அண்டிக் கொள்கிற யாவரும் பாக்கியவான்கள். (சங் 2:12)




உங்கள் பகுதிகளில் சுவிசேஷத்தைப் பரவச்செய்ய விரும்பினால் எங்களிடம் சுவிசேஷ கைப்பிரதிகள் இருக்கின்றன. தங்களுக்குத் தேவைப்பட்டால் எங்கள் அலுவலகத்திற்குத் தொடர்பு கொள்ளலாம்.

ஜெப உதவி மற்றும் தகவல்களுக்கு எங்கள் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

(+91) 9788 404 333

மேலும் தொடர்புக்கு:

இயேசுவின் தொனி
தபால் பெட்டி எண்: 23
இராமநாதபுரம் – 623501

# ஊழிய அறிக்கை

## தீர்க்கதரிசன உபவாச ஜெபம்
## 2025 ஜூலை 12



இராமநாதபுரத்தில் அமைந்திருக்கும் இயேசுவின் தொனி தீர்க்கதரிசன மையத்தில் ஜூலை மாதம் 12ம் தேதியன்று தீர்க்கதரிசன உபவாசக் கூடுகை நடைபெற்றது. முன்பதிவு செய்து தேர்வு செய்யப்பட்டவர்கள் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும், பல மாநிலங்களிலிருந்தும் தேவ பாதத்தில் காத்திருந்து ஜெபிக்கவும், கர்த்தர் பேசின தீர்க்கதரிசன வார்த்தைகளை அறிந்து கொள்ளவும் ஆவலாய் கலந்து கொண்டார்கள்.



காலை 9.30 மணியளவில் ஜெபத்துடன் கூட்டம் ஆரம்பமானது. பாடல் பகுதியை சகோ பிரகாஷ் மற்றும் சகோ கிறிஸ்டோபர் அவர்களும், அதைத் தொடர்ந்து ஜெபப்பகுதியை சகோ ஜேம்ஸ் ஸ்வர்ணராஜ் மற்றும் குழுவினரும் நடத்தினார்கள். கடைசிக்காலத்தில் தேவன் தரப்போகிற நான்குவித அபிஷேகங்கள் பற்றி எடுத்துக் கூறி, ஜனங்கள் அதைப் பெறும்படியாக ஜெபத்தில் வழிநடத்தினார்கள்.




ஆவிக்குரிய அனுபவங்களை எழுதிக் கொடுப்பதன் முக்கியத்துவம் பற்றியும், கடைசிக்காலத்தில் தீர்க்கதரிசனங்களை விளக்கைப்போல கவனித்துப் பார்க்க வேண்டும் என்றும் சகோ சதீஷ் அவர்கள் விளக்கினார்கள். தொடர்ந்து, சகோ ஜேம்ஸ் சிவக்குமார் அவர்கள் தேசத்தில் பஞ்சம் என்கிற தலைப்பில் கர்த்தர் தீர்க்கதரிசி ஐயாவிற்கு வெளிப்படுத்தின தீர்க்கதரிசனங்களைத் தெளிவாக விளக்கி, அதற்காக ஜெபிப்பதன் முக்கியத்துவம் பற்றி சொல்லி மேலதிகமான காரியங்களை அறிந்து கொள்ளும்படி காத்திருந்து ஜெபிக்க வழிநடத்தினார்கள்.

அதைத்தொடர்ந்து, சகோதரர் ஜோனத்தான் ஜேம்ஸ் மற்றும் சகோதரி ஏஞ்சலின் ஜோனத்தான் அவர்கள் தேவபிரசன்னத்தில் காத்திருந்து ஆராதனை செய்யும்படி ஜனங்களை நடத்தினார்கள். தேவ மகிமை அந்த இடம் முழுவதும் அளவில்லாமல் நிரம்பி இருந்ததை யாவரும் உணர முடிந்தது. அதன்பின், மதிப்பிற்குரிய தீர்க்கதரிசி சகோதரர் வின்செண்ட் செல்வகுமார் அவர்கள், தேவன் ஒரு தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்தினால், நாம் உடனடியாக கிரியை செய்ய வேண்டும் என்கிற அவசியத்தைப் பற்றி பேசினார்கள். தீர்க்கதரிசனங்களுக்காக நாம் ஜெபிக்கலாம் அல்லது அதற்கு உரியவர்களிடம் சேர்த்துவிடலாம் அல்லது அதற்காக ஜெப நடை செய்யலாம் என்பதாக ஆலோசனை கொடுத்தார்கள்.











தொடர்ந்து, தீர்க்கதரிசன செய்தியைப் பகிர்ந்து கொண்டார்கள். வெளி 6 மற்றும் 9ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும் தேசத்தில் தோன்றப்போகும் மரண அலையைக்குறித்து எச்சரிக்கை செய்தியளித்தார்கள். மெசபடோமியா தேசத்தில் ஐபிராத்து நதியண்டையில் கட்டப்பட்டிருக்கும் தூதர்களைக் குறித்தும், கடைசிக்காலத்தில் வரப்போகும் மாபெரும் மரண அலையைக்குறித்தும் தீர்க்கதரிசன கண்ணோட்டத்துடன் விளக்கிக்கூறி, தேவன் தீர்க்கதரிசனமான காரியங்களை வெளிப்படுத்தினால் இன்னும் அதுகுறித்த மேலதிகமான விபரங்களை அறிந்து கொள்வது எப்படி என்றும், அதற்காக எப்படி ஜெபிக்க வேண்டுமென்றும் கற்றுக் கொடுத்தார்கள்.

கடைசி ஜெபப்பகுதியில், தேவன் தாகத்தோடு வந்திருந்த அநேகரின் கண்களைத் திறந்து, புதிய தரிசனங்களையும், பல ஆவிக்குரிய அனுபவங்களையும், வெளிப்பாடுகளையும் கொடுத்தார். தீர்க்கதரிசன அழைப்பில் தொடர்ந்து ஓடும்படி கூடி வந்திருந்த ஜனங்களில் அநேகர் தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். தேவன்தாமே இக்கூட்டத்தை முழுவதுமாக பொறுப்பேற்று வழிநடத்தினார். தேவ நாமம் மகிமைப்படுவதாக, ஆமென்.





# ஆவிக்குரிய அனுபவங்கள்

ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டு தேவ தரிசனங்களைக் காண்பது என்பது இப்போது விசுவாசிக்கிற யாவருக்கும் சாத்தியமாகிறது. இந்த கடைசிக்காலத்தில் ஆவிக்குரிய அனுபவங்கள் விசுவாசிக்கிற எல்லாருடைய வாழ்விலும் ஏராளமாக நடக்க ஆரம்பித்திருக்கிறது. இதுவும் கடைசிக்கால அடையாளங்களில் ஒன்று.



## 1. சகோதரி. சிவதா — தஞ்சாவூர்

மாய விஞ்ஞானம் குறித்த காரியங்களுக்காக காத்திருந்து ஜெபித்தபோது, வாலிபர்களை செல்போன் மூலம் இச்சையான காரியங்களுக்கு அடிமைப்படுத்தும் ஆவி, இந்த மாய விஞ்ஞானம் மூலம் கிரியை செய்கிறது. மகா வேசியின் கிரியைகளான வேசித்தனம் மற்றும் விபச்சாரமும் இதில் இருக்கிறது. Neuralink திட்டம் வரும்பொழுது இதன் அடிமைத்தனத்தில் இருக்கும் வாலிபர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்தான் முதலாவது இதை ஏற்றுக் கொண்டு இதற்கு அடிமைப்பட்டு, இதனால் மதிமயங்கிப் போவார்கள். கடைசிக்கால தேவ சேனையாக வாலிபர்கள் எழும்ப முடியாதபடி கிரியை செய்கிற சாத்தானின் தந்திரம் இது. அஸ்தரோத் ஆவியின் கிரியைகள் இந்த மாய விஞ் ஞானத்தில் செயல்படுவதாகவும் உணர்ந்தேன்.

## 2. சகோதரி. ரேவதி லெட்சுமி — பெங்களூர்

நம்மைச் சுற்றி கிரியை செய்யும் ஆவிகளை நாம் கண்டுபிடிக்க வேண்டுமென்று ஐயா கூறினபோது, இரத்தத்தைக் குடிக்கும் ஆவிகள் நம் தேசத்தில் அதிகமாய் கிரியை செய்வதால் அதிகமாக இரத்தம் சிந்தப்படுகிறது என்பதை என் ஆவியில் உணர்ந்தேன். மேலும் ஒரு சிவப்புநிறக் குதிரை, அதின்மேல் சிவப்புநிற ஆடை அணிந்திருந்த ஒரு மனிதனை தரிசனத்தில் பார்த்தேன். அது அரசியல், பொருளாதாரம், உணர்ச்சிகள் இவற்றின் மூலமாய் இரத்தம் சிந்துவதைக் குறிப்பதாக உணர்ந்தேன். கடைசி ஜெபவேளையில் ஜெபிக்கும் போது ஆவியின் பெயரைக் கர்த்தர் வெளிப்படுத்தும்படி ஜெபிக்கக்கூறின போது என் ஆவியில் லேகியோன் ஆவி என்ற பெயரை உணர்ந்தேன்.

## 3. சகோ. விமல் பிரதீப்குமார் — சென்னை

சிக்கிம் என்கிற வார்த்தை மூன்று முறை தொனித்தது. அதன் மீது கவனத்தைச் செலுத்திய போது நாதுலா, காங்டாங் என்ற வார்த்தைகள் தொனித்தது. டோக்லாம் என்ற பெயர் வெளிப்படுத்தப்பட்டது. இந்திய தேசத்தின் கிழக்குப் பகுதியில் குறிப்பாக வங்காள தேச நாட்டுடன் எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் மாநிலங்கள் வரைபடமாக காட் டப்பட்டது. மலைப்பகுதிகளில் நிலச்சரிவுகளும், வெள்ளத்தினால் உண்டான சேதத்தையும் தரிசனமாகப் பார்த்தேன். மாய விஞ்ஞானத்திற்காக ஜெபிக்கும் போது, பெர்னாயேல் என்ற ஆவி செயல்படுவதாக உணர்த்தப்பட்டேன். இரு காளை மாடுகள் அநேகரின் இரத்தத்தைச் சிந்த வைக்கிறது. மார்பஸ் என்ற ஆவி செயல்படுகிறதாக கர்த்தர்

வெளிப்படுத்தினார். அதோடு, மோராக்ஸ் என்கிற ஆவியும் இணைந்து செயல்படுகிறது. அதிகாரங்களை பிடித்திருக்கிற ஆவிகளுக்காக ஜெபிக்கும் போது, பாதாளத்திலிருந்து ஏறிவருகிற அப்பொல்லியோன் என்ற ஆவியின் கிரியைகளை கர்த்தர் வெளிப்படுத்தினார். டான்டாலியன் என்ற ஆவி அழகான முகத்துடன் இருக்கிறது. அது ஏழு முகங்களாக காணப்படுகிறது.

## 4. சகோ. யூனிஸ், விருதுநகர்

மாய விஞ்ஞானத்தின் காரியங்களானது ஜப்பான், இங்கிலாந்து போன்ற தேசங்களில் பரவும் என்று கர்த்தர் வெளிப்படுத்தினார். அதேபோல, இந்திய தேசத்தில் ராஜஸ்தான் மற்றும் குஜராத் மாநிலங்களிலும், அண்டை தேசமான வங்காள தேசத்தின் வயல்வெளிகளில் அக்கினி பாய்ந்து வயல்களை நாசம் பண்ணும். பெரிய கண்களுடன், நீல நிறத்தில் மிகவும் சுருங்கிய உடலைக் கொண்ட ஒரு ஆவியானது இந்திய தேசத்தின் ஒவ்வொரு இடங்களிலும் இறங்குகிறதாகக் கண்டேன்.

## 5. சகோதரி. சந்திரா, தூத்துக்குடி

சீனா, இஸ்ரவேல், அமெரிக்கா, இந்தியா மற்றும் ரஷ்யா தேசங்களின் வான மண்டலத்திலிருந்து வெளவால் இறங்கி மனிதனின் கழுத்தைக் கடித்து இரத்தத்தைக் குடிக்கிறது. இருண்ட விஞ்ஞானம் சேட்டிலைட் மூலமாக அருவருப்பு, ஆபாசம் இறங்கி வருகிறது. அது விநோதமான பாவத்தைக் கொண்டு வருகிறது. மண்ணுக்குள்ளிருந்து புழுக்கள் உலக தேசங்களுக்குள் இறங்கி வருகின்றது. துர்நாற்றத்தினால் தேசம் தீட்டுப்பட்டுப் போகிறதைக் கண்டேன்.

## 6. சகோ. அருணாச்சலம், திருநெல்வேலி

தமிழ்நாட்டின் கடற்கரை ஓரங்களிலும் ஆந்திரா மாநிலத்தின் கால்பங்கு கடற்கரை பகுதிகளிலும் கடல் சீற்றம் பல அடி உயரம்வரை இந்த வருடத்தில் எழும்பும் என்று கர்த்தர் வெளிப்படுத்தினார். கடற்கரை ஓரங்களில் ஊழியம் செய்யும் சபைகளுக்கு, ஊழியர்களுக்கு இந்தக் காரியங்களைச் சொல், அநேக ஜனங்கள் மனந்திரும்புவார்கள். ஆனாலும் கடல் அலை சீற்றம் உருவாகும். ஜெபிக்கிறவர்கள் நிமித்தம் சேதம் குறைக்கப்படும் என்பதாக கர்த்தர் பேசினார். இந்த தீமைக்கு காரணம், கடற்கரையில் காணப்படும் விக்கிரகங்களும், காமகளியாட்டுகளும், பல அசுத்தமான காரியங்களும் நடப்பதால் அப்படி செய்கிறேன் என்று கர்த்தர் வெளிப்படுத்தினார்.

## 7. சகோதரி. அன்னக்கிளி, இராம்நாடு

வெளவால் ஒன்று பெரிய செட்டைகளுடன் வாயில் கூர்மையான பற்களுடன் வானத்திலிருந்து பூமியை நோக்கி இறங்குகிறதைப் பார்த்தேன். அது தேவ பிள்ளைகளை துன்புறுத்துவதற்காக வருகிறது என்பதாக உணர்த்தப்பட்டேன்.

## 8. சகோதரி. பிரீத்தி ஜெனிபர், திருச்சி

ஒரு பெரிய கறுப்பு நிற முரட்டுக் காளை அதன் மூக்கீன் சுவாசம் நெருப்பாக மிகவும் கோபமாக இருக்கிறது. அது பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தும் என்று கர்த்தர் வெளிப்படுத்தினார்.

## 9. சகோ. சிவராஜ், நீலகிரி

தேவ பிரசன்னத்தில் நான் காத்திருந்தபோது, ஒரு தரிசனத்தைப் பார்த்தேன். வானம் சிவப்பு நிறமாக மாலைவேளை போல் இருந்தது. அதுதவிர, கறுமையான மேகங்கள் உருவாகிக் கொண்டிருப்பதையும், அநேக வெளவால்கள் மேலிருந்து கீழே பூமிக்கு பறந்து வந்து, நன்மையானவைகளை அழிக்க வருவதாகவும் பார்த்தேன். இந்த வெளவால்கள் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிற கர்த்தருடைய பிள்ளைகளை குறிவைத்து அழிப்பதற்கும், திசை திருப்புவதற்கும் இறங்கி வருகிற வானமண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகள் என்பதாக உணர்த்தப்பட்டேன்.

## 10. சகோதரி. ஜெபமேரி, இராமநாதபுரம்

கடற்கரையிலிருந்து பெரிய கரடி போன்ற ஒரு மிருகம் எழும்பி வருகிறது. அதன் வாயிலிருந்து திரள் திரளாக வெளவால்கள் சென்னை பட்டணத்தை நோக்கி வருகிறது. அது எழுப்புதலுக்கென்று தெரிந்து கொள்ளப்பட்ட ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் கழுத்தில் கடிக்கிறது. அப்பொழுது அவர்கள் மந்தமாய் மாறிவிடுகிறார்கள். அதைப் பார்த்து வில் எய்யும் போது, அநேக வெளவால்கள் அந்த வில் பட்டு மரித்ததாக பார்த்தேன்.

## 11. சகோதரி. தெபோராள், ஈரோடு

ஸ்கேன் மெஷின் மூலமாக கருவிலுள்ள குழந்தைகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில், கருப்பையை பார்க்க பார்க்க நான்கு மரத்துண்டுகளின் நடுவிலுள்ள இரண்டு மரத்துண்டுகளின் நடுவிலிருந்து ஒரு அழுகிய நிலையில் பெண்ணின் தலை எழும்புகிறது. புத்தகங்கள் அடுக்கி

வைக்கப்பட்டுள்ளது. அப்பொழுது பிள்ளைகளின் படிப்பில் வஞ்சகம் நேரடியாக வந்து பிள்ளைகளை நாசப்படுத்துகிறது என்றும், இது நிர்ஷானியோன் ஆவி என்றும் ஆவியானவர் வெளிப்படுத்தினார். ஆசியா கண்டத்தின் நடுமையத்திலுள்ள நாடு, வௌவால் போல தன் செட்டைகளை விரித்து கீழுள்ள நாடுகளுக்கு வரும்பொழுது, விவசாய மெஷின் விளைச்சல்கள் அனைத்தையும் நாசமாக்கி காய்ந்து போகச் செய்தது. சீனா தேசத்திலிருந்து பச்சை நிறம் போன்ற அநேக தேச ங்களுக்கு தங்கப் பெட்டிகள் இரயில் பெட்டிகளைப் போல அனுப்பப்படுகிறது.

## 12. சகோதரி. மேகலா , சென்னை

முதன் முறையாக நடுக்கடலில் இரண்டு சர்ப்பங்கள் ஒன்றையொன்று சந்திக்கிறது. அவைகளுக்கு ஐந்து கொடுக்குகள் கொண்ட தலைகள் உள்ளது. சில வௌவால்களைக் கண்டேன். அவைகள் தன் இடத் திலிருந்து வேகமாக வருகிறது. மண்ணிலிருந்து வண்டுகள் போல எழும்பி அவைகள் அனைத்தும் ஒரு காளையின் உருவமாக மாறுகிறது. (காளையின் தலை உருவம் மட்டும்) அப்பொழுது மார்பஸ் என்ற பெயர் வெளிப்படுத்தப்பட்டது.

## 13. சகோதரி. அபிலாவதி , திருப்பதி

ஆவிகளின் பெயர்களைச் சொல்லி ஜெபத்தில் நடத்தும் போது, சிவப்பு வஸ்திரம் தரித்து, சிவப்பு குதிரைகளின் மேல் ஏறி வருகிறவர்கள் இந்திய தேசத்தில் கால் வை த்து, தேசத்தின் ஜனங்களின் இரத்தத்தை சிந்தும்படி புறப் பட்டு வருகிற அந்நிய தேசத்தார் என்றும், நான்கு பெரிய கதவுகள் என்பது இந்திய தேசத்தின் மிக முக்கியமான நான்கு பெரிய அதிகாரத்திலுள்ளவர்கள் என்பதாகவும் உணர்த்தப்பட்டேன். அந்நிய தேசத்திற்கு இவர்கள்தான் வாசல்கள் என்றும், இருண்ட விஞ்ஞானம், இருளின் அதிகாரம் என்கிற வார்த்தைகளையும் உணர்ந்தேன். அப்பொழுது பறக்கிற கழுகை என்னுடைய உள் உணர்வில் பார்த்தேன். அது பூமியின் மீது பறப்பது போல் காட்டப்பட்டது. காத்திருந்தபோது, ஒரு அசுத்த ஆவியின் உருவம் ஒரு மனிதனைப்போல சிங்காச னத்தில் உட்கார்ந்திருந்தது. அது பார்ப்பதற்கு மனித உருவத்தில் இருந்தாலும், பயமுறுத்தக்கூடிய தோற்றத் தில் காட்சியளித்தது. அது பார்வோனின் ஆவி என்று உணர்த்தப்பட்டேன். அதன் தலைக்குப் பின்னால் வட்டவடிவிலான கீரிடம்போல் சூரியக் கதிர்கள் வீசி க்கொண்டிருக்கிறது. அந்த ஆவியின் கையில் ஒரு அநேக ஈட்டிகள் கூட்டமாக பறக்கிறது. எந்த இடத்தை நோக்கிப் பறக்கிறது என்று தெரியவில்லை. ஆனால் அவைகளை யாரோ வேகமாக எய்வதைப் போல தெரிந்தது. அது பெரிய அளவில் நீளமாகவும், தடிமனாகவும் இருந்ததைப் பார்க்க முடிந்தது. சூரியக் கடவுள் என்கிற வார்த்தை இருதயத்தில் உணர்ந்தேன்.

## 14. சகோ. இஸ்ரவேல் ராஜா, மதுரை

சீனா தேசத்திலிருந்து பல தீமைகள் வருகிறது என்றும், ஜன ங்களை மதிமயக்கப்பண்ணும் காரியங்கள் அங்கிருந்து புறப்படப் போகிறது என்பதாக கர்த்தர் உணர்த்தினார்.

## 15. சகோதரி. கிருபா, கோயம்பத்தூர்

மாய விஞ்ஞானம் குறித்து ஜெபிக்கும்போது, கூகுள் நிறுவனம் ஏ.ஐ குறித்து பேசினார். கூகுள் நிறுவனத் தின் தந்திரம், அதில் மறைமுக காரியம் உண்டென்று கூறினார். இந்த வஞ்சக காரியத்தில் அமெரிக்க தலை யீடு அதிகரிக்கும். அதிகாரப்பிரபுக் குறித்து ஜெபிக்கும் பொழுது ஓநாய்கள் தன் பற்களால் மனிதர்களை பட்சித்து கவ்விக் கொண்டு வீதிகளில் திரிகின்றது. அதை அடக்க ஒருவனும் இல்லை. அதற்குப் பின்னாலே சங்கிலிகள் கட்டப்பட்டிருந்தன. அது பல ஓநாய்களாக தெரிந்தது.

## 16. சகோதரி. இராமலெட்சுமி, சென்னை

ஐந்து மாநிலங்களுக்காக ஜெபித்த பொழுது சென் னைக்காக ஜெபிக்கச் சொன்னார். இரத்தம் சிந்துதல் நடக்கப் போகிறது. அதிகாரத்தில் உள்ளவர்களை உடன் பட வைக்கிறார்கள். ஒத்துக்கொள்ளவில்லை என்றால் மிரட்டி ஒத்துக்கொள்ள வைக்கிறார்கள். பெரிய அழிவு வரப்போகிறது. முக்கியமாக கப்பல் துறைமுகத்திற்காக ஜெபிக்கும்படி ஏவப்பட்டேன். பெரும்பொருள், உயிர் சேதத்திற்கு தந்திரமான ஆலோசனைகள் நடக்கின்றது. எலிகூர் என்கிற ஆவி கிரியை செய்கிறதைப் பார்த்தேன்.

## 17. சகோதரி. மதுமதி, ஈரோடு

ஆப்பிரிக்கா தேசம் காண்பிக்கப்பட்டு, அதன் பொரு ளாதாரம் குறி வைக்கப்பட்டிருப்பதைக் காண்பித்தார். திருமணமான பெண்களை அடிப்பது போன்ற கொடுமைகளைச் செய்வது ஒரு குரங்கின் ஆவி. திரும ணமாகும் பெண்களை கால்களில் தவளைபோன்ற ஆவி பிடிக்கும்பொழுது அவர்களுடைய கண்கள் கட்டப்படுகிறது. தொலைக்காட்சிக்கு ஜனங்களை அடிமைப்படுத்துவது ஒரு பச்சை நிறமுடைய சர்ப்பம். தங்க நகைகளைக் குறிவைத்து ஒரு சர்ப்பத்தின் ஆவி கிரியை செய்கிறது.

## 18. சகோதரி. சென்னம்மாள், சென்னை

சிறுபிள்ளைகளுக்கு விரோதமாக கண்டுபிடிக்கப்படுகிற மருந்துகள் (தடுப்பூசிகள்) மூலமாக அநேக பிள்ளைகள் குறிப்பிட்ட வயதிற்குப் பிறகு மரித்துப் போவார்கள் என்றும், பாலகர் வாயினால் பழிகாரனை அடக்கிப்போடு வேன் என்கிற வாக்குத்தத்தம் நிறைவேறாதபடிக்கு சாத் தான் விஞ்ஞானிகள் மூலம் பல தவறான மருந்துகளை உருவாக்குகிறான் என்றும் கர்த்தர் பேசினார்.

## 19. சகோதரி. சரண்யா, கோலார்

காஷ்மீரில் நடந்த தீவிரவாத கிரியைகளை கர்த்தர் வெளிப்படுத்தினார். இராணுவத்தில் அதிநவீன ஆயுதங்கள் தங்களிடத்தில் இருப்பதை பிற நாடுகளுக்கு காண்பிப்பதற்காக இது தேசத்தின் தலைவர்களால் திரைமறைவில் திட்டமிடப்பட்டது. ஆனால் மறைந்திருக்கும் ஆவி இரத்தத்தினால் தன்னைப் பலப்படுத்திக் கொள்கிறது. எனவே, தலைவர்களுக்குப் பின்னால் கிரியை செய்யும் ஆவிகளை கட்டும்படியாகவும், இஸ்லாமியர்கள் யாவரும் தீவிரவாதிகள் என்பதாகக் கூறி மதப்பிரச்ச னையை உண்டுபண்ணும்படி திட்டம் செய்வதாக தேவன் வெளிப்படுத்தினார்.

## 20. சகோ. பேட்ரிக் ஜோயல், சென்னை

கடைசி ஜெப வேளையில், நான் கர்த்தரிடம் Neuralink பற்றியும், அதன் நோக்கங்கள் பற்றியும் கேட்டபோது, அது ஒரு யேசபேலின் ஆவியென்றும், வெளி 2:20ம் வசனத்தை கர்த்தர் ஞாபகப்படுத்தினார். இந்த ஆவி ஊழியர்களின் பிள்ளைகளை குறிவைத்துக் கொஞ்சம் கொஞ்சமாக அவர்களை தவறான பாலியல் இச்சை களிலும், விக்கிரக வழிபாடுகளிலும் அடிமைப்படுத்தி, பின்வரும் நாட்களில் தேவ ஊழியர்களும் அவர்கள் பிள்ளைகளும் கர்த்தருக்கென்று எழும்ப முடியாதபடி தடை செய்வது இதன் நோக்கம் என்பதாக உணர்த் தப்பட்டேன்.

## 21. சகோதரி. ரேணுகா, இராமநாதபுரம்

மருத்துவத்துறையில் ஏ.ஐ மூலமாக சாதாரண மனிதர்களிடத்திலும் மருத்துவம் என்கிற பெயரில் கிரியைகள் நடைபெறும் என்று இருதயத்தில் உணர்த் தப்பட்டேன்.

## 22. சகோதரி. குளோரி, ஈரோடு

இஸ்ரவேல் தேசம் செயற்கைக்கோள் இணைப்பின்



தலைமையகமாக இருக்கிறது. அங்கிருந்து மின்னல் போன்ற கோடுகள் வானத்துடன் இணைப்பில் உள்ளது. இதற்காக அமெரிக்கா முதற்கட்டமாக பண உதவி செய்கிறார்கள். அதன்பின்பு சீனா அதனுடன் இணைந்து, அதைப் பொருளாதாரத்தில் ஆதரிக்கிறது. அவர்கள் அறிமுகப்படுத்திய கைப்பேசிகளின் வசதிகள் ஜனங்களுக்கு மிகவும் உபயோகமாகவும் இருக்கிறது. இந்த திட்டம் உலகிலுள்ள எல்லாராலும் நன்மையானது என்று அங்கீகரிக்கப்பட்டவுடன், அதன் வாயை சாத் தான் திறந்து, ஜனங்களை விழுங்கிப்போடும். இதில் கிறிஸ்தவர்கள், எழுப்புதலுக்காக ஒப்புக்கொடுத்தவர் கள், முத்திரை போடப்பட்டவர்களையும் விழுங்கிப்போட சாத்தான் யத்தனிக்கிறான். சாத்தானின் தந்திரங்களை தீர்க்கதரிசன கண்களை உடையவர்கள் அறியக்கூடாது என்பதற்காகவே, சில பெயர் தெரியாத தேசங்கள் மந்திரம் செய்கிறார்கள். அந்த மந்திரத்தின் விளைவால் வெளவால்கள் பறந்து வந்து, அசுத்த ஆவியின் கிரியைகளை தன் செட்டைகளால் மறைக்கிறது. காலம் வருமுன் ஜெபித்தால், ஆத்துமாக்களை காப்பாற்ற முடியும். இல்லையென்றால் அவர்களை சாத்தான் அடிமையாக்கிவிடுவான். இந்தியாவில் ஏழு மலை யுடைய மலைத்தொடர்ச்சி வட பகுதியில் உள்ளது. அதன்பின் பழுப்பு நிறத்தில் ஒரு ஆவி தன் வாயைத் திறக்கும்போது மணல் பறக்கிறது. அது நம் தேசத்தின் குடிகளைக் கொடிய சட்டதிட்டத்தின் மூலம் பட்சித் துப்போடும். சட்டத்தை மீறுவதாலேயோ, சட்டத்தை கடைபிடிக்க முடியாததால் வரும் தண்டனையை சகி த்துக் கொள்ளும் மனம் இல்லாத ஜனங்கள் தங்கள் வீடுகளில் குடும்பமாய் உயிரை மாய்த்துக் கொள்வா ர்கள். வீடுகளிலிருந்து இரத்தம் வீதியில் வழிந்தோடும் என்பதாக வெளிப்பாடுகள் பெற்றேன்.

# நான் அசைக்கப்படுவதில்லை

சகோதரி ஏஞ்சலின் ஜோனத்தான்



நம் வாழ்வில் பல காரியங்களை நமக்கு முன்பதாக வைத்துக் கொண்டு, அதை நோக்கி ஓடுவதை வழக்கமாக வைத்திருக்கிறோம். சிலர் தங்கள் இலக்குகளை, சிலர் நேரங்களை, சிலர் வெற்றியை, வேலைகளை முன்பதாக வைத்து அதை நோக்கி தங்கள் வாழ்க்கையில் ஓடிக்கொண்டிருப்பதை வழக்கமாக வைத்திருக்கலாம். இதெல்லாம் ஒரு புறம் இருந்தாலும், இதற்கு நடுவில் தேவனுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறதில் நாம் எப்படி இருக்கிறோம் என்பதைத்தான் ஆராய்ந்து பார்க்க வேண்டும். தேவனை நம் வாழ்வில் மையப்படுத்தி, அவருக்கு முதலிடம் கொடுக்காமல் நம் விருப்பத்திற்கேற்றபடி வாழ்க்கையை அமைத்துக் கொண்டால், போராட்டங்களும் பிரச்சனைகளும் ஒன்றன்பின் ஒன்றாக வருகிறபோது நாம் நிச்சயம் தளர்ந்தும், சோர்ந்தும் போய்விடுவோம்.

ஒரு மனிதனின் வாழ்க்கை நிலையானதாக, அசைக்கப்படாததாக இருக்க வேண்டுமானால், இங்கு தாவீது ஒரு இரகசியத்தை சொல்லிக் கொடுப்பதைப் பார்க்கிறோம்.

கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை. சங்கீதம் 16:8

தேவனை நம் வாழ்வில் முன்பாக வைப்பது என்றால், தினந்தோறும் தேவனிடம் நம் வாழ்வை அர்ப்பணித்து, அவருடைய விருப்பத்தின்படி சீரமைத்துக் கொள்வதுதான். அப்போது எத்தனை பிரச்சனைகள் வந்தாலும் நாம் அசைக்கப்படமாட்டோம் என்கிற பார்முலாவைத்தான் தாவீது நமக்குச் சொல்லிக் கொடுக்கிறார்.

### 1. கர்த்தரை எப்போதும் முன்பாக வைத்திருப்பது

கர்த்தர் ஒவ்வொரு நாளும் 24 மணி நேரமும் என்னைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார் என்கிற சிந்தை தாவீதுக்குள் எப்போதும் இருந்தது. இந்த உணர்வும், சிந்தையும் நமக்குள் இருந்தால் நிச்சயம் தவறு செய்யமாட்டோம். நம் வாழ்வின் எல்லா நேரங்களிலும் 'கர்த்தர் எனக்கு முன்பாக இருக்கிறார்' என்கிற சிந்தையில் கருத்தாய் இருக்கும்போது, தேவ வசனத்தின்படியும், தேவ சித்தத்தின்படியும் அவருடைய கண்ணோட்டத்தின்படி நம் வாழ்க்கையை பார்க்க ஆரம்பிப்போம். இந்த நாளில் எதை நமக்கு முன்பாக வைத்திருக்கிறோம் என யோசித்துப் பாருங்கள். சிலருக்கு மொபைல், சிலருக்கு இன்டர்நெட், சிலருக்கு பயங்கள், லட்சியங்கள் என இவைகளை முன்பாக வைத்து ஓடிக்கொண்டிருக்கிறோமா அல்லது கர்த்தரை முன்பாக வைத்திருக்கிறோமா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

### 2. தேவன் என் வலதுபாரிசத்தில் இருக்கிறார்

தேவன் நம் வாழ்வில் அரணாக, துருகமாக, பாதுகாக்கும் தேவனாக, வாழ்வின் எல்லா சூழ்நிலையிலும் பெலன் தருகிறவராக எப்போதும் என்னோடுக்கூட இருக்கிறார் என்று அர்த்தம். நாம் தனியாக இல்லை, கர்த்தர் நம்முடன் இருக்கிறார். அவர் நம் சார்பில் கூடவே இருக்கும்போது எதுவொன்றும் நம்மைத் தொடவும் சேதப்படுத்தவும் முடியாது.

### 3. நான் அசைக்கப்படுவதில்லை

நான் அசைக்கப்படுவதில்லை என்பதை தாவீது உணர்ந்து விசுவாசித்து, வைராக்கியமாகவும், விசுவாச அறிக்கையாகவும் தைரியமாய் சொல்லுகிறதைப்

பார்க்கிறோம். அதாவது, தேவனுக்குள் ஆழமான அஸ்திபாரத்தையும், அவருக்குள் ஆழமாக வேர் பற்றி இருக்கிறதையும், நங்கூரமிட்டிருப்பதையும் குறிக்கிறது. அப்போது, எத்தனை போராட்டங்கள் புயல்போல வந்தாலும், அது பொருளாதார ரீதியாகவோ அல்லது வியாதி, குடும்பப் பிரச்சனைகள் என எதுவாக இருந்தாலும் சரி, நாம் ஒருநாளும் அசைப்படமாட்டோம் என்கிற நிச்சயத்தை தேவன் தருகிறார்.

### எப்போது தேவனை முன்பாக வைப்பது?

1. ஒரு நாளை ஆரம்பிக்கும் முன், அந்த நாளை நிறைவு செய்யும்போது கர்த்தரையே முன்பாக வைக்க வேண்டும்.

ஒவ்வொரு நாளையும் முதலாவது நாம் தேவனைத் தேடி அவர் கரத்தில் எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்து, ஜெபத்துடன் துவங்கும்போது நாம் செய்கிற சகல காரியங்களையும், நம் வழிகளை, மனநிலையை தேவன் முழுவதுமாக பொறுப்பெடுத்துக் கொள்வார். நமக்கு முன்பாக கர்த்தரே கடந்து சென்று பாதைகளை செவ்வைப்பண்ணுவார். தடைகளை மாற்றுவார். இன்று நம் வாழ்வில் எதை முதலாவது வைத்து அந்த நாளைத் துவங்குகிறோம் என யோசித்துப் பாருங்கள். குடும்பம், சமூகவலைதளங்கள் இதற்கு முதலிடம் கொடுக்கிறோமா என ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒருவேளை முடியாவிட்டால் கூட, கர்த்தரைத்தான் என் வாழ்வில் முன்பாக வைப்பேன் என்பதை ஒரு தீர்மானமாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சர்வ வல்ல தேவன் நம்மோடேக்கூட இருக்கிறார் என்பதை உணாந்துவிட்டால் நிச்சயமாக அசைக்கப்படமாட்டோம். ஒவ்வொரு நாளை நிறைவு செய்கிறபோது, தேவனை நினைத்து, அந்த நாளுக்காக நன்றி சொல்லி, ஜெபித்து தூங்கச் செல்லும்போது தேவ பிரசன்னம் நம்மை மூடிக்கொள்ளுகிறதைப் பார்க்க முடியும்.

2. முடிவுகளை எடுக்கும் நேரங்களில் கர்த்தரையே முன்பாக வைக்க வேண்டும்.

அப்போது தேவன் ஞானத்தையும், சமாதானத்தையும் கொடுத்து நடத்துவார். மாத்திரமல்ல, அடைக்கப்பட்ட எந்த வாசலையும் திறப்பார், தடைகளை மாற்றி புதிய வாசல்கள் திறக்கப்படுவதை பார்க்க முடியும். நாம் லாஜிக்காக யோசித்துக் கொண்டிருக்காமல் எல்லா காரியங்களுக்கும் கர்த்தரையே முழுவதுமாக சார்ந்து, அவரை முன் வைத்து நடக்கும்போது நாம் ஒரு நாளும் அசைக்கப்படுவதில்லை.

உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைபடுத்து வார். நீதி 3:6

நாம் வாழும் இந்த உலகம் நிலையற்றது. இந்த நிலையற்ற உலகத்தில் நாம் அசைக்கப்படாமல் நிலைத் திருக்க ஒரே வழி, கர்த்தரை எப்போதும் முன்பாக வைப்பதுதான். அப்போது தேவ வழிநடத்தலும், தேவ பெலனும், தேவ சமாதானமும் சந்தோஷமும் நம் வாழ்வில் நிறைந்திருப்பதைப் பார்க்க முடியும்.

தேவனை முன்பாக வைப்பதை எப்படி சுலபமாக புரிந்து கொள்ளலாம் என்றால், நம் வாழ்வின் பிரச்ச னையான சூழ்நிலைகள் வருகிறபோது அந்தப் பிரச்ச னைகளுக்கு நடுவில் தேவ பிரசன்னத்தை நாடித் தேட வேண்டும். அதுபோல, உலகத்தின் சத்தம் நம்மைச் சுற்றி நெருக்குகிறபோது, அதன் நடுவில் தேவ சத் தத்துக்குச் செவிகொடுத்து கீழ்ப்படிய வேண்டும். பல நேரங்களில் நம் சுய விருப்பத்தின்படி தான் நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறோம். ஆனால், தேவ சித்தத்தின்படி அவருடைய வழியை நாம் தேர்வு செய்து சார்ந்து கொள்ளும்போது கர்த்தரையே முன்பாக வைக்கிறோம் என்று அர்த்தம்.

ஒரு ஆவிக்குரிய மனிதன் அசைக்கப்படாமல் ஜெயமுள்ள வாழ்க்கையை வாழ ஒரே வழி, கர்த்தரை எப்போதும் முன்பாக வைத்திருப்பதே. அப்போது நாம் அசைக்கப்படுவதில்லை என்கிற வாக்குத்தத்தத்தை கர்த்தர் நமக்குக் கொடுக்கிறார்.




முதன் முதலாக விண்வெளிக்கலத்திலே எடுத்துச் செல்லப்பட்ட புத்தகம் நம்முடைய பரிசுத்த வேதாகமமே. மைக்ரோ பிலிமாக வேதாகமம் அப்போலோ-8 என்ற விண்கலத்திலே எடுத்துச் செல்லப்பட்டது. வேதாகமத்தின் முதல் வசனமான ‘ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்’ என்பதுதான் விண்வெளிக்கலத்திலிருந்து வாசிக்கப்பட்ட முதல் வாக்கியமாகும். போர்மென் என்ற விண்வெளி வீரர் 1968-ம் ஆண்டில் விண்வெளியில் அப்போலோ-8 விண்கலத் திலிருந்து இதை வாசித்தார்.

**துணுக்குச் செய்திகள்**

# மனதுடன் யுத்தம்

## - சாத்தானின் கடைசிக்கால ஆயுதம்



மனம் ரொம்பவும் ஆச்சரியமானது. மாத்திரமல்ல, மனதின் செயல்பாடுகளும் புரிந்துகொள்ளக் கடினமானதும் கூட. ஒரு மனிதனுடைய மனதைக் குழப்பினால் போதும், அவன் பலமிழந்தவனாய் மாறிவிடுவான். ஒரு மனிதனை இயக்குவது அவன் மனம்தான். கிறிஸ்தவ விசுவாசிகளோடே சாத்தான் ஒரு காலத்தில் மாம்சத்தில் சண்டை போட்டான். ஆனால், சாத்தான் கடைசிக்காலத்தில் சரீரத்தை தொட மாட்டானாம். மனதைத் தொடுவான் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். ஜனங்களை தடுமாறப் பண்ணவும், அவர்கள் ஆத்துமாக்களை சிறைப்பிடித்து அவர்கள் ஜீவனுக்கு அழிவை உண்டாக்கவும் சாத்தான் வைத்திருக்கும் இரகசியமான திட்டம்தான் இந்த மனோதத்துவப் போர்.

மனிதர்களுக்கு நடுவில் தோன்றப் போகும் இந்த மனோபாவ மாற்றம் என்பது உலகத்தின் கடைசிக்காலத்தில்தான் உண் டாகும் என்று வேதம் சொல்லுகிறது (2 தீமோத்தேயு 3: 1-5). இந்த மனநிலை மாற்றத்தினால் மனிதர்கள் சுபாவத்தில் பயங்கரமானவர்களும், பொல்லாதவர்களும், நிர்விசாரிகளு மாக மாறப் போகிறார்கள்.

இன்றைக்கு சமுதாயத்தில் நடக்கும் பல கொடுமையான சம்பவங்களுக்குக் காரணம், மனதில் ஏற்படுகின்ற மாற்றங் களே. இணையதளத்தைப் பயன்படுத்துவதன் மூலமாக இன்றைக்கு அநேகர் குறிப்பாக, சிறுவர்கள், வாலிபர்கள் புத்தி மழுங்கினவர்களாகவும், தற்கொலை செய்கிறவர்களாகவும், அசுத்தங்களைச் செய்கிறவர்களாகவும், மனித இரத்தத்தைச் சிந்துகிறவர்களாகவும் மாறிக்கொண்டு வருகிறார்கள்.

ஆனால், சாத்தானின் இந்த மனோதத்துவப் போர் கர்த்தரு டைய ஜனங்களிடத்தில் வேறு விதமாய் கிரியை செய்கிறது. எப்படியென்றால், அவர்கள் ஆத்துமாக்களைத் தடுமாறப் பண்ணுகிறதும், விசுவாசத்தையும் வேத வசனங்களையும் விட்டு வழிவிலகப் பண்ணுகிறதுமான மாம்சத்தைத் தூண் டுகிற ஆராதனைகளுக்கும், கள்ள உபதேசங்களுக்கும் செவி கொடுத்து, ஜெபிக்கிறதையும், கர்த்தருடைய முகத்தைத் தேடுகிறதையும் அந்நிய காரியமாகக் கருதி, இம்மைக்காக மாத்திரம் கர்த்தர்மேல் நம்பிக்கையுள்ளவர்களாக அவர்களை வாழச் செய்கிறது. மனதுடன் யுத்தம்பண்ணுகிற சாத்தானின் இந்த ஆயுதத்திற்கு எதிராக ஜெபிக்கலாம் வாங்க.

## ஜெபக்குறிப்புகள்

**1** மனிதர்களுடைய மனங்களில் ஏற்படுகிற கொடிய மாற்றங்களின் மூலம் சமுதாயத்தில் நடக்கிற கொலைகளும், தற்கொலைகளும், பாலியல் வன்கொடுமைகளும் தடுக்கப்படவும், சிறுவர் முதல் வயதானவர்களைச் சீரழித்து தவறான சிந்தனையுள்ளவர்களாயும், தங்கள் எதிர்காலத்தைக் குறித்துக் கவலையற்ற வர்களாயும் அவர்களை மாற்றுகிற சாத்தானின் தந்திரங்களும், மனிதர்களுடைய கொடிய விஞ் ஞானங்களும் முடக்கப்படவும் ஜெபிப்போம்.

**2** சாத்தானின் மனோதத்துவப் போர் என்ற இந்த கண்ணியில் சிக்கியிருக்கிறவர்களைக் கர்த்தர் விடுவித்து அவர்கள் மனதைப் புதிதாக்கி மறு ரூபமாக்கவும், கள்ள உபதேசத்தினாலும், கள்ள ஆராதனையினாலும் வஞ்சிக்கப்பட்டு சத்தியத்தை விட்டு விலகி இம்மைக்காக வாழ்கிற தேவ ஜனங்கள் விழிப்படைந்து, தங்கள் அழைப்பையும் தேவ சித்த த்தையும் குறித்து ஜாக்கிரதையுள்ளவர்களாகவும், விசுவாசத்திலும் ஜெபத்திலும் உறுதியாய் தரித்தி ருக்கிறவர்களாகவும் மாற ஜெபிப்போம்.

## புதிய நிகழ்ச்சிகள்

ஞாயிறுதோறும்
**தி பைனல் கால்**
(ENGLISH PROGRAM)

திங்கள்தோறும்
**நடைமுறை பேச்சு**

செவ்வாய்தோறும்
**நிறைவேறின தீர்க்கதரிசனம்**

புதன்தோறும்
**மறைவில் மின்னும் நட்சத்திரம்**

வியாழன்தோறும்
**பேசும் நிழல்கள்**

வெள்ளிதோறும்
**வேதம் அறிவோம்**

சனிதோறும்
**வேதமும் விஞ்ஞானமும்**

WWW.YOUTUBE.COM @ THE FINAL ALERT

A
NEW YOUTUBE
CHANNEL OF
VOICE OF JESUS
MINISTRIES

# THE FINAL ALERT
# தி பைனல் அலெர்ட்

தினசரி
இரவு
**9 PM**

கடைசிக்காலத்தில் தேவனை சந்திக்கும்படி நம்மை ஆயத்தப்படுத்துவதற்கேற்ற செய்திகளும், இன்னும் பல கலந்துரையாடல்களும் இடம்பெறுகின்றன.. காணத்தவறாதீர்கள்.. பிறருக்கும் அறிமுகப்படுத்துங்கள்..

## இயேசுவின் தொனியின் புதிய வெளியீடு

தீர்க்கதரிசி சகோ. வின்சென்ட் செல்வகுமார் அவர்கள் எழுதிய **புதிய புத்தகங்கள்** வெளிவந்துள்ளது..




**சாத்தான் வரும் வாசல்**

மேலும் நமது புத்தகங்களைப் பெற விரும்பினால்
எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்







**எழுப்புதலின் எதிரிகள் (தமிழ்/ஆங்கிலம்)**

FOR CONTACT

(+91) 9788 404 333
(+91) 9731 722 977